ஈழநாடு 18 ஜனவரி 1999

# போசாக்குள்ள உணவின்மையால் வாடும் மாணவர்களுக்கு வேலணை ம.ம.வித்தியாலயப் பழைய மாணவர் சங்கம் நிதியுதவி

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் தற்போது பலவிதமான இன்னல்களுக்கு மத்தியில் கல்வி பயின்று வரும் மாணவர்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்தமையினால் மலேரியா நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களினால் அடிக்கடி பாதிக்கப்படுவதனாலும் உடல் நலங் குன்றியமையாலும் வருமானங் குறைந்த குடும்பங்களில் உள்ளமையினால் போசாக்குள்ள உணவின்மையாலும் கல்வியிலும் விளையாட்டுக்களிலும் ஊக்கங் குறைந்தவர்களாக உருவாகி வருவதாகவும் அம் மாணவர்களுக்குப் போசாக்குள்ள உணவு வழங்க உதவுமாறு கல்லூரியின் அதிபர் திரு கு.கணேசலிங்கம் அவர்கள் விடுத்த உருக்கமான வேண்டுகோளை ஏற்று வேலணை மத்திய மகாவித்தியாலயப் பழைய மாணவர்சங்கக் கனடாக் கிளையினர் நிதியுதவியளித்து வருவது யாவரும் அறிந்ததே. கடந்த வருடம் அனுப்பி வைக்கப்பட்ட நிதியுதவி மூலம் செப்ரம்பர் மாதம் 2ம்திகதி முதல் போசாக் குணவுத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதற்காக நாளாந்தம் சராசரி ரூபா 1100.00 செலவாகின்றதாக அதிபர் திரு கணேசலிங்கம் அவர்கள் 16.09.98 அன்று தமக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாரென்றும் இத்திட்டத்தைத் தொடர்ந்தும் சிறந்த முறையில் இந்த வருடத்திற்கும் நடைமுறை படுத்த ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாக்கள் வரை தேவைப் படுவதாகவும் இந்நிதியைத் தவணை அடிப்படையில் அனுப்பி உதவ மேற்படி சங்கத்தின் நிர்வாக சபையினர் தீர்மானித்துள்ளதுடன் அதன் முதற் கட்ட நிதியுதவியாக 1200.00 டொலர்களைக் கடந்த 12.01.99 அனுப்பி வைத்துள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் திரு க. பாஸ்கரன் அவர்கள் தெரிவித்துள்ளார். கல்லூரியின் சில அவசரத் தேவைகளை நிறைவேற்றி அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதுடன் கடந்த காலங்களைப் போன்று தமிழர்புனர்வாழ்வுக்கும் நிதியுதவியளிக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.